O.S. 138/2018 நாள் 04.07.2026

வா.சா.3 சாமுவேல்ராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

நான் 7 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் ஒப்பந்ததாரர் என்பதைக் காட்ட என்னிடம் ஆவணம் எதுவும் இல்லை. பொதுவாக வீடு கட்டும்போது எழுத்துமூலமாக உரிமையாளரும், ஒப்பந்ததாரரும் ஒப்பந்தம் போடுவார்கள் என்பது சரிதான். அதுபோல் எதுவும் எழுத்துமூலமாக ஏற்படுத்திக் கொள்ளவில்லை. இந்த வீட்டிற்கு வரைபடம் யார் தயார் செய்தது என்று எனக்குத் தெரியாது. வீடு சம்பந்தப்பட்ட எந்த வரைபடமும் நான் பார்க்கவில்லை. அந்த வீடு இரண்டு மாடி கொண்டது. தரைதளம் எப்போது கட்டி முடிக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது. அதை நான் கட்டவில்லை. மேல்பகுதி எந்த ஆண்டு கட்டப்பட்டது என்று எனக்குத் தெரியாது. இந்த வழக்கு யார், யார் மீது போட்டிருக்கிறார்கள், எதற்காக போட்டிருக்கிறார்கள் என்று தெரியாது. 2015 ம் வருடம் ஒரு சதுரஅடி வீடு கட்ட ஆகும் செலவு ரூ.1,350/– ஆகும். இந்த இடம் 2–3/4 சென்ட். வா.சா.ஆ.10 நான் தான் தயார் செய்தேன். இதில் என்னுடைய அலுவலக முகவரியோ, வீட்டு முகவரியோ இல்லை என்றால் சரிதான். வீட்டின் மேல்பகுதி மற்றும் கீழ்பகுதி எத்தனை சதுர அடி என்று எனக்குத் தெரியாது. நான் ஒப்பந்ததாரர் இல்லை என்றாலும் வாதி எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால் வா.சா.ஆ.10 குறித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் தந்தையிடம் எந்த ரசீதும் நான் வாங்கவில்லை. நான் வீடு கட்டாத காரணத்தினால் தான் வாதியின்

Uploaded on 04.07.2026

தந்தையிடம் ரசீது எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கது இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.